DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
CC.No.358/2004

Deposition of witness for: PW - 8

Name : **சரவண போஸ்** Father/Husband Name : **முனியான்டி**

Age : Calling :

Date : 16.04.2026

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 16 day of 04.2026.

( **சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது** ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்சமயம் கீழவளவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் கடந்த 2004ம் வருடம் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் மாணிக்கம் அவர்களுடைய கையொப்பத்தை மற்ற ஆவணங்களிலிருந்து எனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் அவர் தயார் செய்த ஆவணத்தை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கில் தலைமை காவலர் நிலைய குற்ற எண் 89/2002 பிரிவு 420 இதச ன்கீழ் வழக்கு பதிவுசெய்து புலன்விசாரணை அதிகாரி மாணிக்கம் வசம் வைத்துள்ளார்.

இவ்வழக்கில் சார்பு ஆய்வாளர் மாணிக்கம் செய்த புலன்விசாரணையிலிருந்து சாட்சிகள் பிரபு, காட்டுராஜா, நசீர்கான், பவுன்ராஜ், ஆகியோர்களை விசாரித்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் 22.12.2001ம் தேதி 1ம் எதிரி பிரபுவிடம் பணம் ரூ.40000/- தருவதாக ஒப்புக்கொண்டு சாட்சிகள் அழகுபாண்டி, நீலமேகம் முன்னிலையில் எழுதிக்கொடுத்த ஆவணத்தில் கையொப்பம் இட்டது குறித்து மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்துள்ளார். மேலும், இவ்வழக்கின் சென்னை ஏர்போர்ட் எமிக்ரேசன் அலுவலரை விசாரித்து ஆவணங்கள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் மாண்புமிகு மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்றதால் கைது செய்யவில்லை.

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் அமிர்தலிங்கள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் புலன்விசாரணை முடித்து பிரிவு 420 இதச ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**1ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இவ்வழக்கின் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தது சாட்சிகளை விசாரித்தது புலன்விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது நான் அல்ல என்றால் சரிதான். எந்த சாட்சிகளை எந்த சூழ்நிலையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்ற விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டது விவரம் தெரிந்துகொண்டேன். அவசியமான சாட்சிகளை விசாரித்து அதன்பின்னர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. புலன்விசாரணை அதிகாரி சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிதான் ஏஜென்டாக செயல்பட்டு புகார்தாரரை வெளிநாட்டிற்கு அனுப்பினார் என்று ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது. அது என்ன, என்ன ஆவணம் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால்

குற்ற இறுதி அறிக்கையின் பரீசிலனை செய்ததன் அடிப்படையில் என்னால் சாட்சியம் அளிக்கமுடியும்.

2) நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் உள்ள சாட்சிகளை சரி வர விசாரிக்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, புகார்தாரருக்கும், ஆஜர் 1ம் எதிரிக்கும் இடையே இடம் விற்பது சம்மந்தமான இடை தரகராகத்தான் தெரியும், 1ம் எதிரி புகார்தாரர் மூலமாக கொடுக்கவில்லை என்பதனால் புகார்தாரர் 1ம் எதிரி பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை, புகார்தாரருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.